**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 400/2018**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12–ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | முனியாண்டி |
| பெயர்: | அய்யம்மாள் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சட்டநாதபுரம் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 80/2023 |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 12.12.2023.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

04.06.2016–தேதியிட்ட தாவா சொத்திற்கான எனது பெயரில் உள்ள கணிணி சிட்டாவின் நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்திற்கு நான் செலுத்திய கிஸ்தி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2–வரிசை (எண்ணிக்கை.3) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. (பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தானது ஏற்கனவே விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு கிரய தொகை முழுவதும் பெற்றுவிட்டதாக ஆட்சேபணை செய்யப்பட்டது, ஆட்சேபணை

பேரில் குறியீடு செய்யப்படுகிறது)

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.